DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.06/2023**
**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 14-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 14 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | தங்கராஜ் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | பழனிச்சாமி | சமயம் | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 59/2025 |
| சாதி | - | | | | |

**25-08-2025**

**(1-ம் எதிரி ஆஜரில்லை. 2-ம் எதிரி ஆஜர்)**
(1-ம் எதிரி தரப்பில் குவிமுச.பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் செட்டிப்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.12.2022-ம் தேதி 19.30 மணிக்கு வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது பொள்ளாச்சி சல்டானா ரோட்டை சேர்ந்த மருதன் மகன் முத்துராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.192/2022 சட்டப்பிரிவுகள் 288, 338 இ.த.ச-வின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. ( **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் அன்றைய தினமே 20.30 மணிக்கு சம்பவயிடமான வால்பாறை டவுண், காமராஜ் நகர் பவின் காட்டேஜ் பின்புறம் சம்பவயிடத்தை லைட் வெளிச்சத்தில் சாட்சி மொய்தீன் என்பவர் அடையாளம் காட்ட சாட்சிகள் அபிலாஸ் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். ( **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் சாட்சிகள் முத்துராஜ், மொய்தீன், மணி, முத்துராஜ் மகன் சக்தி (எ) சக்திவேல், சின்னப்பன் மகன் சக்திவேல், அபிலாஸ் மற்றும் ராஜேந்திரன் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 03.12.2022-ம் தேதி காலை 06.00 மணிக்கு கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மணிகண்டன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், கிடைத்த தகவலின் பேரில் காலை 09.00 மணிக்கு வழக்கின் சட்டப்பிரிவினை 288, 338 இ.த.ச-விலிருந்து 288, 304(A) இ.த.ச-

வின் படி பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.கற்பகம் அவர்கள் பார்வைக்கு வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவம் நடந்த 30.11.2022-ம் தேதி மருத்துவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இறந்த மணிகண்டன் எத்தனாவது மாடியில் இருந்து விழுந்தார் என்பதை எனது விசாரணையில் தெரிந்து பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இரண்டு மாடி கட்டிடத்தின் 2-வது மாடியில் இருந்து கீழே விழுந்துள்ளார் என்று பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் 2-வது மாடியை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். 2-வது மாடியில் மஞ்சள் நிற தலைகவசம் மஞ்சள் நிற நையிலான் கயிறு இருந்தது என்றால் இல்லை.

2. எனது முதற்கட்ட விசாரணையை முடித்து ஆய்வாளரிடம் வழக்கு கோப்பை எந்த தேதியில் ஒப்படைத்தேன் என்றால் 03.12.2022-ம் தேதி ஒப்படைத்தேன். 01.12.2022-ம் தேதியிலிருந்து 03.12.2022-ம் தேதி வரை நான் மட்டும் தான் வழக்கு சம்பவம் பற்றி விசாரணை செய்கிறேன் என்றால் சரிதான். அந்த நாட்களில் ஆய்வாளர் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடம் செல்லாமலேயே வழக்கு கோப்புகள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.